30th April 1959]

SRI A. MARIAPPAN : பர்மா, சிலோன் போன்ற இடங்களில் கைத்தறித் துணிக்கு அதிகம் செலவு இருந்ததே ? அது குறையக் காரணமென்ன ? அதை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எல்லா நாடுகளிலும் தேசிய மனப்பான்மை வளர்ந்து வருகிறது. எப்படி நாம் நம் நாட்டில் நமது பண்டங்களேயே உபயோகிக்க வேண்டுமென்று சொல்கிறேமோ அதே போல் அந்தந்த நாடுகளில் சுதேசி மனப்பான்மை வளர்ந்து வருவதனுல் நமது துணி ஏற்றுமதி குறைந்து கொண்டேயிருக்கிறது. இருந்தாலும் பர்மா போன்ற இடங்களில் அதிகமாக அவர்கள் கைத்தறி உற்பத்தி செய்வதில்லே. மற்ற துணிகளேத்தான் அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே, எந்த வகையில் அந்த சர்க்காருடன் நேரடிப் பேச்சு வார்த்தைமூலம் அல்லது வேறு எந்த வகையில் அதை அதிகரிக்க முடியும் என்பதை இப்பொழுது சொஸைட்டிகள் எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன.

SRIMATHI HEMALATHA DEVI : நமது மாகாணத்தில் எந்தெந்த ஜில்லாக்களிலிருந்து வெளி நாடுகளுக்கு கைத்தறித்துணி அனுப்பப் படுகிறது ? சேலம் ஜில்லாவிலிருந்து எவ்வளவு துணி வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைக் கண்டு பிடிக்க முடியாது. சென்னே துறை முகத்தில் இருந்து எவ்வளவு ஏற்றுமதியாகிறது என்று தான் கணக்கு கொடுக்க முடியும்.

Plantation Labourers

*300 *Q*.—SRI J. MATHA GOWDER : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தோட்ட தொழிலாளர் வீடுகளுக்கு மின்சாரம் வசதி செய்து கொடுக்க தோட்ட முதலாளிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் என்ருல் எப்பொழுது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The answer is in the negative.

SRI J. MATHA GOWDER : தோட்டங்களில் உள்ள தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கு மின்சார வசதி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனுல் தோட்டத் தொழிலாளர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதில் முதலாளிகளிடம் பணம் இல்லேயென்ற காரணத்தினுல் அல்ல. ஆனுல் செய்யக்கூடாது என்ற மனப்பான்மை யிருப்பதால் உடனடியாக சர்க்கார் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளில் மின்சார வசதி அளிக்க உத்திரவிடுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் நினேத்த படியெல்லாம் உத்தரவு போடமுடியாது. ஆனுல், சர்க்கார், முக்கூட்டுக் கமிட்டிகளிலும், தொழிலாளர், முதலாளிகள் நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தும் போதும் இதைப் பற்றி வற்புறுத்தி ஆவன செய்வதற்கு தயாராக யிருக்கிறேம்.

TRUTH ALONE TRIUMPHS